# யாழ்ப்பாணக் கல்வி வலயம்

## மாதிரிப் பரீட்சை - II 2014

## வரலாறு

தரம் :- 11 நேரம் :- 3 மணித்தியாலம்

### பகுதி II

- **பகுதி Iல் முதலாம் வினா கட்டாயமானது.**
- **பகுதி IIல் இருந்து மூன்று வினாக்களும், பகுதி IIIல் இருந்து இரு வினாக்களும் தெரிவு செய்தல் வேண்டும்.**
- **எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.**

### பகுதி I

01. (அ) பகுதி (i) இன் கீழ்த் தரப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப்படத்திலும் பகுதி (ii) இன் கீழ்த் தரப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ள உலகப்படத்திலும் குறித்து பெயரிடுக.

(i) வனவாகினி நதி, திரியாய், வெல்லஸ்ஸ, கல்க நதி (கல்லோயா), பராக்கிரம சமுத்திரம், முல்லேரியா, ஜம்புகோளப்பட்டுன, மாத்தளை, தந்திரிமலை, கலாவாவி. **(10புள்ளிகள்)**

(ii) கங்கை நதி, பத்தேவியா, சென்னை, மக்கா, காவேரி நதி, வத்திக்கான், செங்கடல், பாரசீக வளைகுடா. **(08 புள்ளிகள்)**

(ஆ) (i) கீழே தரப்பட்டுள்ள A,B,C,D ஆகியவற்றில் சொல்லப்பட்டுள்ள வரலாற்று விபரங்களோடு தொடர்புடையவர்களை வரிசைக்கிரமமாக உமது விடைத்தாளில் எழுதுக.

A. தக்கின தேசத்தை பரிபாலனம் செய்தபோது பண்டா வாவியை விசாலமாக்கி அதனைச் சூளவுள்ள பகுதியை அபிவிருத்தி செய்தவர்.

B. கி.பி ஐந்தாம் நூற்றாண்டளவில் இலங்கைக்கு வந்து அபயகிரி விகாரையில் இரு ஆண்டுகள் தங்கி இலங்கை பற்றிய தகவல்களையும் உள்ளடக்கி ஒரு நூலை இயற்றிய சீனப் பிக்கு.

C. இலங்கை பற்றி குறிப்பிட்டுள்ள ஒரு நூலை எழுதிய சந்திர குப்த மௌரிய அரச சபையில் இருந்த கிரேக்கத் தூதுவர்.

D. 1833 ஆம் ஆண்டு கோல்புறுக் கமரனின் அரசியல் யாப்பு இலங்கையில் நடைமுறைக்கு வரும் போது இலங்கையின் பிரித்தானிய ஆளுநர். **(04புள்ளிகள்)**

- A,B பகுதியில் தரப்பட்டுள்ள படங்களைப் பயன்படுத்தி வினாக்களுக்கான விடைகளை வரிசைக்கிரமத்தில் விடைத்தாளில் எழுதுக.



(ii) 1. இந்தப் படைப்பு (A) எதனைக் குறிக்கின்றது?

2. இந்தப் படைப்பு எவ் இராசதானியில் அமைந்துள்ளது?

3. இந்தப் படைப்பினை உருவாக்கிய தளபதி யார்?

4. இந்தப் படைப்பு அமைந்த பிரதேசத்தினை இராசதானியாக உருவாக்கிய மன்னன் யார்? **(04 புள்ளிகள்)**



(ii) 1. படம் (B) யில் காணப்படுபவரின் பெயர் யாது?

2. படத்தில் காணப்படுபவரின் எவ் ஐரோப்பிய நாடு?


3. படத்தில் காணப்படுபவர் இலங்கையில் ஆளுநராக செயற்பட்ட காலம் யாது?

4. படத்தில் காணப்படுபவர் மலையகத்தினை கைப்பற்ற படையெடுத்த ஆண்டு?

(04 புள்ளிகள்)

## பகுதி II

02\. 1. அருகில் உள்ள இலங்கைப்படத்தில் A,B,C என குறிக்கப்பட்டுள்ள நதிக்கரைகளில் ஆரியப்புலப்பெயர்ச்சிக் குழுக்கள் குடியேற்றங்களை நிறுவ தெரிவுசெய்யப்பட்டன. அந் நதிகளின் பெயர்களை சரியான ஒழுங்கு முறையில் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)




2\. A,B,C,D ஆகியவை குறிக்கும் ஒவ்வொரு வரலாற்று நிகழ்சிசியுடன் தொடர்புடையவர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்க.

A. அநுராதபுரத்தில் இருந்து பொலநறுவைக்கு இராசதானியை மாற்றிய சோழமன்னன்.

B. இலங்கையில் இலம்பகர்ண அரசபரம்பரையை தோற்றிவித்த மன்னன்.

C. மாத்தளை அலுவிகாரையில் திரிபீடகத்தை எழுதுவதற்கு ஆதரவளித்த மன்னன்.

D. ருவான்வெலிசாய, மிரிசிவெட்டிய தூபிகளை கட்டிய மன்னன்.

(கவந்திஸ, இராஜேந்திரசோழன், துட்டகைமுனு, இராஜராஜசோழன், வசபன், வலகம்பாகு, வொஹாரிகதிஸ்ஸ)

(04 புள்ளிகள்)

3\. வசப மன்னனின் அரசியல், சமய முக்கியத்துவத்தை **ஒவ்வோர்** உதாரணத்துடன் விளக்குக.

(05 புள்ளிகள்)

4\. பொலநறுவை இராசதானி வீழ்ச்சியடைய ஏதுவான காரணங்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக.

(06 புள்ளிகள்)

03\. 1. நீர்வள நாகரிகம் நிலவிய அனுராதபுர, பொலன்னறுவைக் காலங்களில் A, B, C எனக் கீழே குறிக்கப்பட்டுள்ள ஒவ்வொருவரினதும் உத்தியோகபூர்வப் பதவியைக் குறிப்பிடுக.

A. கிராமத்தின் நிர்வாகி.

B. உருகுணைரட்டையின் ஆட்சியாளன்.

C. மாயரட்டையின் ஆட்சியாளன்.

(03 புள்ளிகள்)

2\. கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் ஒவ்வொன்றும் அமைக்கப்பட்ட தொழினுட்பவியல் படைப்புகளைக் கீழே தரப்பட்டுள்ள பட்டியலிலிருந்து தெரிந்தெடுத்து முறையே எழுதுக.

A. குளத்தின் மேலதிக நீரை வெளியேற்றல்.

B. குளக்கட்டினை நீரின் அலைகளில் இருந்து பாதுகாத்தல்.

C. கால்வாயினூடாக நீரைக்கொண்டு செல்வதற்கு ஆற்றுக்குக் குறுக்கே கற்குற்றிகளை இட்டு அமைக்கப்படும் தடுப்பு.

D. குளத்தில் உள்ள நீரின் அமுக்கத்தைச் சமப்படுத்தி மடையினூடாக பிரதான கால்வாய்க்கு நீரை விடுவித்தல்.

(நீர்வழங்கும் குளம், அலைதாங்கி, கலிங்கல், அணைக்கட்டு, சுருங்கை, கலிங்கல் தொட்டி)

(04 புள்ளிகள்)

3. ஆரியக் குடியிருப்புக்களின் பரவலுடன் அவர்கள் ஏன் நீர்ப்பாசன செயற்திட்டங்களை அமைப்பதில் கவனம் செலுத்தினார் என்பதை இரு காரணங்களுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

4. புராதன கால நீர்ப்பாசனவியல் தொழில்நுட்பவியலாளர்கள் கால்வாய்களை அமைப்பதற்குப் பயன்படுத்திய தொழில்நுட்பத்தை இரு உதாரணங்களின் துணையுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

04. 1. பின்வரும் தென்மேற்கு இராசதானிகளை உருவாக்கியவர்களைத் தருக

a. தம்பதேனியா

b. குருநாகல்

c. கம்பளை

(03 புள்ளிகள்)

2. பின்வரும் இலக்கிய நூல்களுக்குரிய இராச்சியங்களைக் குறிப்பிடுக

a. யோகரத்னாகரய

b. நிக்காய சங்கிரகாய

c. நலைதா சிரித

d. தம்பதேனிய கதிகாவத்த

(04 புள்ளிகள்)

3. தென்மேற்கு நோக்கிய இராசதானிகளின் இடப்பெயர்வு மக்களின் சமூக வாழ்க்கையில் ஏற்படுத்திய மாற்றங்களை இரு உதாரணங்களுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

4. ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக்கால சிறப்புகள் மூன்று கூறி விளக்குக (06 புள்ளிகள்)

05. 1. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகைதரும் போது இந்நாட்டில் காணப்பட்ட மூன்று பிரதாண இராச்சிங்களையும் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

2. பின்வரும் வரலாற்று நிகழ்வுடன் தொடர்புபட்டவர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து முறையே எழுதுக.

A. போர்த்துக்கேயரின் கைப்பொம்மையாகவிருந்த கோடடையின் இறுதி அரசன்.

B. போர்த்துக்கேயருக்கு எதிராக முல்லேரியா யுத்தத்தை வெற்றிகொண்ட சிங்கள மன்னன்.

C. கி.பி 1602 இல் ஸ்பில்பேர்ஜன் என்ற ஒல்லாந்தர் கண்டிக்கு வந்த வேளையில் கண்டிய மன்னன்.

D. இரண்டாம் இராஜசிங்கன் அரசனின் காலத்தில் கண்டியில் கைதியாக இருந்து பின்னர் இலங்கை பற்றிய ஒரு நூலை (எதாஹெலதிவ) எழுதிய ஆங்கிலேய நபர்.

(7ஆம் விஜயபாகு, தொன்சுவான் தர்மபாலன், பிரட்ரிக்நோத், 1ஆம் இராஜசிங்கன், 1ஆம் விமலதர்மசூரியன், றொபேட் நொக்ஸ்) (04 புள்ளிகள்)

3. போர்த்துக்கேயர் கோட்டை இராச்சியத்தில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்ள ஏதுவாயிருந்த உள்நாட்டு அரசியல் தகராறுகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

(05 புள்ளிகள்)

4. ஒல்லாந்தர் எப்போதும் மலையக பொருளாதார நலன்களில் கவனம் கொண்டிருந்தனர் என்பதற்கு 1638, 1766 ஆகிய ஆண்டுகளின் உடண்படிக்கைகளிலுள்ள ஒவ்வொரு நிபந்தனையை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(06 புள்ளிகள்)

06\. 1. எந்த அரசியலமைப்பின் கீழ் பின்வரும் சீர்திருத்தங்கள் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டன என ஒழுங்கு முறையில் எழுதுக.

A. சட்டவாக்க கழகம் அமைக்கப்பட்டமை.

B. நிறைவேற்று அதிகாரக்குழு முறை அமைக்கப்பட்டமை.

C. இரு சபை கொண்ட பாராளுமன்றம் அமைக்கப்பட்டமை. (03 புள்ளிகள்)


2\. பிரித்தானியர்கள் இலங்கையினை கைப்பற்ற ஏதுவான இரு பிரதான காரனங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

3\. கோல்புறுக் கமரனின் சீர்திருத்தம் மூலம் இலங்கையில் ஏற்பட்ட நிர்வாக மாற்றங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

4\. பிரித்தானியர் அறிமுகப்படுத்திய பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் விளைவால் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டினை உதாரணத்துடன் விளக்குக.

## பகுதி III

07\. 1. தரப்பட்டுள்ள படத்தில்




A. யினால் காட்டப்பட்டுள்ள மலைச்சாரலின் பெயரையும்

B. யினால் காட்டப்பட்டுள்ள துறைமுகத்தின் பெயரையும்

C. யினால் காட்டப்பட்டுள்ள நதியின் பெயரையும் அதே ஒழுங்கில் எழுதுக. (03 புள்ளிகள்)

2\. பின்வரும் வரலாற்று நிகழ்வுடன் தொடர்புபட்டவர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து முறையே எழுதுக

A. வடமேற்கு இந்தியாவில் படையெடுத்த முதல் கிரேக்க பேரரசன்.

B. ஆரியர் இந்தியாவிற்கு வந்த போது அங்கு இருந்த பண்டைய நாகரிகம்.

C. நான்காம் பௌத்த மாநாட்டுக்கு ஆதரவு வழங்கிய குஷான மன்னன்.

D. மேகதூதம், சாகுந்தலம், குமார சம்பவம் ஆகிய இலக்கியங்களினை எழுதியவர்.

(காளிதாசர், கௌடில்யன், மகா அலக்சான்டர், சிந்துவெளி, கனிஷ்கன், அசோகன், நைல்நதி)

(04 புள்ளிகள்)

3\. அசோக சக்கரவர்த்தியின் சமய சேவைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

4\. குப்த கால கல்வி முறையின் சிறப்புகள் இரண்டினை உதாரணத்தின் துணையுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

08\. 1. விஜயநகரப் பேரரசை ஆட்சி புரிந்த மன்னர்கள் மூவரைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

2\. பின்வரும் விகாரைகள் அமைந்துள்ள நாடுகளை அதே ஒழுங்கில் எழுதுக?

a. அங்கோவாட்

b. போரோபுதுர்

c. ஸ்வேதகோன்

d. சுகோதய விகாரை (04 புள்ளிகள்)

3\. மொகாலய பேரரசின் புகழ் மிக்க மன்னர்கள் இருவரைக் குறிப்பிட்டு அவர்களின் ஒவ்வொரு பணிகளை விளக்குக. (05 புள்ளிகள்)

4\. இஸ்லாமியர்கள் இந்தியாவைக் கைப்பற்ற ஆர்வம் காட்டியமைக்கு ஏதுவான காரணங்கள் மூன்றினைத் தந்து விளக்குக. (06 புள்ளிகள்)

09. 1. பின்வரும் பிரதேசங்களினைக் கண்டுபிடித்த நாடுகாண் பயனிகளின் பெயரினை கீழே தரப்பட்டுள்ள அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

A. புயல்முனை

B. அவுஸ்ரேலியா

C. ஹட்சன் வளைகுடா

(மகலன், வாஸ்கொடகாமா, டம்பியர், பத்தலோமிடயஸ், ஹென்றி ஹட்சன்) (03 புள்ளிகள்)

2. மத்தியகால ஐரோப்பாவின் மானிய முறை பொருளாதாரத்தின் சிறப்பியல்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

3. ஐரோப்பாவில் மானியமுறைமை பொருளாதாரம் சீர்குலைந்தமைக்கு ஏதுவான காரணங்கள் **இரண்டினைக்** குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

4. ஐரோப்பாவின் மறுமலர்ச்சி காலத்தில்

A. கலைகள்

B. விஞ்ஞானம்

ஆகிய துறைகள் ஒவ்வொன்றிலும் ஏற்பட்ட வளர்ச்சிகளை **இவ்விரண்டு** உதாரணங்களுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

10. 1. கைத்தொழில் புரட்சியினால் பிரித்தானியாவில் முதன் முதலில் மாற்றத்திற்குட்பட்ட துறைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

2. கைத்தொழில் புரட்சியின் போது உற்பத்தி செய்யப்பட்ட சில புதிய ஆக்கங்கள் A, B, C, D ஆகியவற்றின் கீழ் காணப்படுகின்றன. அவற்றை உற்பத்தி செய்தவர்களின் பெயரினை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

A. நீராவி இஜந்திரம்

B. மோட்டார் வண்டி

C. ஆகாய விமாணம்

D. தொலைபேசி

(கிரகம்பெல், ஜேம்ஸ்வாட், டெம்னற், றையிட்சகோதரர், ஹென்றிகோட், ஜேம்ஸ்வார்)

(04 புள்ளிகள்)

3. இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சி ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய இரு காரணங்களினைக் குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

4. கைத்தொழில் புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகள் (சாதக, பாதக) **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக. (06 புள்ளிகள்)

